* முழுப் பதிப்புரிமையுடையது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை 2018 டிசம்பர்

## மாணவர்களுக்கான கருத்தரங்கு தொடர்

## மாதிரி வினாப்பத்திரம்

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் -I ,II** | **3 மணித்தியாலங்கள்**

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் -I**

**கவனிக்க.**

1. **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
2. **இலக்கம் 01 தொடக்கம் 40 வரையான வினாக்களின் கொடுக்கப்பட்டுள்ள (1),(2),(3),(4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிக.**
3. **உங்களுக்கு வழங்கப்படும் விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் தரப்படும் வட்ட எண்ணில் நீங்கள் தெரிவு செய்யும் விடைக்குரிய இலக்கத்தை கொண்ட வட்டத்தை (X) அடையாமிடுக.**
4. **அவ்விடைப்பத்திரத்தின் பின்பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

* பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம் 4 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

  ''தனியார் போக்குவரத்து தேவையை நிறைவு செய்யும் பிரசித்தமான நிறுவனமான ''தீலா டிரவல்ஸ்'' நிறுவனத்தின் பல ஆண்டுகள் சேவை செய்த ''சனுகி'' அங்கிருந்து விலகி ''சனுடிரவல்ஸ்'' எனும் பெயரில் தனியார் போக்குவரத்து சேவையை வழங்கும் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தார். அதிவேக வீதிகள் உருவாக்கியமை, வீதிகள் விஸ்தரிக்கப்பட்டமை என்பன தன்னுடைய வியாபரத்திற்கு இலகுவாக இருப்பதுடன் ஒவ்வொரு ஆண்டும் ஆரம்ப மாதங்களில் கல்வி சுற்றுலா செல்வதற்காக பஸ் வண்டிகளுக்கு அதிகரித்த தேவை கானப்படுவதாகவும் அவள் கூறினார்''

1) சம்பவத்தில் குறிப்பிடப்படும் ''சனுடிரவல்ஸ்'' நிறுவனத்தினால் நிறைவு செய்யப்படும் தேவை மற்றும் விருப்பத்தை முறையாக காட்டும் விடையானது.

   (1) மகிழ்ச்சி – சுற்றுலா (2) சுகாதாரம் - மகிழ்ச்சி

   (3) போக்குவரத்து - சுற்றுலா (4) சுற்றுலா - போக்குவரத்து

2) ''சனுடிரவல்ஸ்'' நிறுவனத்தில் அக்கறை செலுத்தும் சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட பிரிவினர் இருவர்
   (1) “தீலா டிரவல்ஸ்”நிறுவனம் மற்றும் பாடசாலை மாணவர்கள மாணவர்கள்
   (2) ''தகடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள்
   (3) தொழிலாளர்கள் மற்றும் வங்கி
   (4) வங்கி மற்றும் அரசு

3) சனுகியின் வியாபாரத்தின் பலம் மற்றும் வாய்ப்பு என்பவற்றை முறையே காட்டும் விடை.

   (1) சனுகி''தீலா டிரவல்ஸ்'' நிறுவனத்தில் வேலை செய்தமை மற்றும் அதிவேக வீதிகள் உருவாக்குதல்
   (2) பாதைகள் விஸ்தரிக்கப்பட்டமை மற்றும் வண்டிகளுக்கு காணப்படும் அதிகளவான தேவை.

   (3) சனுகியிடம் போதியளவான மூலதனம் மற்றும் அவரிடம் காணப்படும் வியாபார திறமை.

   (4) பாடசாலை கல்வி சுற்றுலா மற்றும் சனுகியின் அர்ப்பணிப்பு.

4) ‘‘சனுடிரவல்ஸ்’’நிறுவனத்திடம் காணப்படும் வாகனம் உள்ளடங்கும் உற்பத்திக்காரனி

(1) நிலம் (2) மூலதனம் (3) உழைப்பு (4) முயற்சி

5) கீழே காட்டப்பட்டுள்ள வணிக அமைப்புக்களை இலாப நோக்கமுடைய வணிக அமைப்புக்களை மட்டும் உள்ளடக்கிய விடையை தெரிக.

A - கூட்டிணைக்கப்பட்ட கம்பனி B– அரச கூட்டுத்தாபனம்

C– தனியுடமை D– பங்குடமை E– அரச திணைக்களம்

(1) A,D,E, (2) A,B,C (3) A,C,D (4) B,C,E

6) பங்குடமையொன்றின் இருக்கக்கூடிய ஆகக் கூடிய பங்காளரின் எண்ணிக்கையை வரையறுக்கும் சட்டம்.

(1) 1890ம் பங்குடமைச் சட்டம் (2) 2007ம் ஆண்டு 7ம் கம்பனி சட்டம்

(3) மோசடி தவிரப்பு சட்டம் (4) 1972 5ம் கூட்டுறவு சட்டம்

7)‘‘விமல ஸ்டோர்’’வியாபாரத்தின் பெயரை பதிவு செய்வது கட்டாயமானதாகும். என உரிமையாளர் நுவன் விமலசிரிக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கான காரணமாக அமைவது.

(1) வியாபாரத்திற்கான சட்ட அந்தஸ்தை பெற்றுக்கொள்ள.
(2) அரசினால் வழங்கப்படும் உதவிகளை பெற்றுக்கொள்ள.
(3) உரிமையாளரின் முழுப்பெயரில் அல்லாமல் வேறு பெயரில் வணிகத்தை நடாத்திச்செல்லல்.
(4) அவருடைய பெயருக்கு சமனான பெயரில் வணிகத்தை நடாத்திச்செல்ல.

8) வணிக வங்கியில் நடாத்தப்படுகின்ற கணக்கு வகை ஒன்றின் பயன்கள் கீழே காட்டப்பட்டுள்ளது

(1) பணத்திற்கு பாதுகாப்பு கிடைத்தல்
(2) வட்டி வருமானம் கிடைத்தல்
(3) வரவு அட்டை மூலம் கொடுப்பனவு செய்தல்

மேலே தரப்பட்டுள்ள பண்புகளை உள்ளடக்கிய கணக்கு வருமாறு

(1) நடைமுறை கணக்கு
(2) நிலையான வைப்புக்கணக்கு
(3) சேமிப்பு கணக்கு
(4) கால வைப்பு

9) ருவன்வெல்ல இலங்கை வங்கியில் நடைமுறை கணக்கு உரிமையாளரான அசன்க அவிசாவெல்ல செலான் வங்கியில் நடைமுறை கணக்கு வைத்திருப்பவரான சிவநாதனிடம் தனது வியாபாரத்திற்கு அவசியமான இயந்திரத்தை கொள்வனவு செய்து அதற்கான கொடுப்பனவை காசோலை மூலம் செலுத்தினார்.

மேற்குறித்த சம்பவத்தில் குறித்த காசோலையை வரையுனர் ,கொடுனர் ,பெறுனர் ஆகியோரை முறையே காட்டும் விடையானது.

1. அசன்க, இலங்கை வங்கி- ருவன்வெல்ல, வங்கி, சிவநாதன்
2. சிவநாதன், செலான்வங்கி - அவிசாவெல்ல , அசன்க
3. அசன்க, செலான்வங்கி - அவிசாவெல்ல ി , சிவநாதன்

4. சிவநாதன், இலங்கை வங்கி- ருவன்வெல்ல ,அசன்க

10) ஆயுள் காப்புறுதி தொடர்பாக மிகச்சரியான கூற்றாக அமைவது.

1. ஆயுள் காப்புறுதிற்கு அதிஉயர் நம்பிக்கை தத்துவம் பொருத்தமற்றதாகும்.
2. ஆயுள் காப்புறுதியின் பெறுமதியானது குறித்த காப்புறுதி பெறுவோனால் தீர்மானிக்கப்படுகின்றது.
3. ஆயுள் காப்புறுதியில் புரண இழப்பீட்டுத்தத்துவம் பொருத்தமாகும்.
4. ஆயுள் காப்புறுதிற்கு ஒப்பந்தம் பெறப்படும் போது ஆயுள் தொடர்பாக எழும் அனைத்து இடர்களும் நீக்கப்படுதல்.

11) தொடர்பு சாதனங்கள் பல கீழே காட்டப்பட்டுள்ளது.

A. ஸ்கைப் B. சுற்றறிக்கை C. ஈ மெயில் D. டிஜிடல் விளம்பரம்

மேலே உள்ள தொடர்பு சாதனங்களில் நடைமுறை, வாய்மொழி மற்றும் எழுத்து மூலமான தொடர்பு முறைகள் இரண்டிற்கும் பொதுவான முறையாக அமைவது.

(1) Aமட்டும் (2) A,B மட்டும் (3) B,Cமட்டும் (4) மேலே உள்ள எல்லாம்.

12) போக்குவரத்து முறைகளில் அனுகூலம் மற்றும் பிரதிகூலங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

A) பெருமளவான பயணிகளையும், பொருட்களையும் ஒரே தடவையில் கொண்டு செல்ல முடிதல்
B) போக்குவரத்து தடைகள் இல்லை.
C) ஓப்பீட்டளவில் குறைந்த காலம் எடுத்தல்.
D) இறுதி வரை பயணிக்க முடியாது.

மேலே உள்ள பண்புகளை உள்ளடக்கிக் காணப்படக்கூடியது.

(1) ஆகாய வழி போக்குவரத்து (2) நீர் வழி போக்குவரத்து

(3) பெருந்தெரு போக்குவரத்து (4) புகையிரத வழி போக்குவரத்து

13) இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட நாடுகளுக்கிடையில் நடைபெறும் வியாபாரம் .....(1)...... வியாபாரம் ஆவதுடன் இலங்கையின் இறப்பர் உற்பத்தியினை வெளிநாட்டுக்கு விற்பனை செய்தல்.....(2)...... வியாபாரம் ஆகும்.

மேலே தரப்பட்ட (1), (2) ஆகிய இடங்களுக்கு பொருத்தமான விடையை முறையே காட்டுவது.

(1) வெளிநாட்டு மற்றும் இறக்குமதி (2) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

(3) வெளிநாட்டு மற்றும் ஏற்றுமதி (4) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

கீழே உள்ள சம்பவத்தை பயன்படுத்தி இல 14 மற்றும் 15 வினாக்களுக்கு விடை தருக.

- யோகட் உற்பத்தி செய்யும் நிறுவனமானது தனது நிறுவனத்தால் எதிர்பாக்கப்பட்ட விற்பனை குறைந்தமைக்கான காரணத்தை தேடியறிதலின் பின் புதிய திட்டத்துடன் யோகட் சந்தைக்கு முன்வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

14) யோகட் விற்பனையானது வீழ்ச்சியடைந்தமைக்கான காரணத்தை தேடியறிந்து அதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் முகாமைத்துவத்தில் எக்கருமமாகும்.

(1) நெறிப்படுத்துதல் (2) ஒழுங்கமைத்தல்

(3) கட்டுப்படுத்தல் (4) திட்டமிடல்

15) மேலே உள்ள வியாபாரத்தில் காணப்படுகின்ற சந்தைபடுத்தல் கலவையாக அமைவது.

(1) விலை (2) மேம்படுத்தல்

(3) உற்பத்தி பொருள் (4) இடம்

16) கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களில் மூலதன இலாபத்தை பெற்றுக் கொள்வதற்கான முதலீட்டு வழி முறையாக அமைவது.

(1) திறைசேரி உண்டியல் மூலம் (2) சேமிப்பு கணக்கு மூலம்.

(3) நிலையான வைப்பு மூலம் (4) கம்பனி ஒன்றின் சாதாரண பங்கு கொள்வனவு மூலம்.

- கீழே வணிகமொன்றில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் காட்டப்பட்டுள்ளது. அதனை கருத்தில் கொண்டு 17ம் 18ம வினாக்களுக்கு விடை தருக.

A) உரிமையாளர் ஈடுபடுத்திய மேலதிக மூலதனம் - ரூ 500,000
B) காசுக்கு பொருட்கள் கொள்வனவு - ரூ 20,000
C) மின் கட்டண கொடுப்பணவு - ரூ 8,000
D) ரூபா 8000 பெருமதியான பொருட்கள் ரூபா 10,000க்கு விற்பனை செய்யப்பட்டது.

1) மேலே A,B,C,D நடவடிக்கைகளுக்கு பின்பு வணிகத்தின் சொத்துக்களின் பெறுமதியில் ஏறபட்ட மாற்றமானது.

2) 494,000 (2) 510,000 (3) 520,000 (4) 530,00

18) மேலே உள்ள கொடுக்கள் வாங்கல்களில் உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கொடுக்கல் வாங்கல்களாக அமைவது.

(1) A,B,C (2) A,C,D (3) B,C,D (4) A,B,C,D

19) வணிகமொன்றிக்கு ரூபா 2,000,000 இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமையால்

(1) சொத்து அதிகரிக்கும் , பெறுப்பு அதிகரிக்கும்
(2) செலவு அதிகரிக்கும் ,சொத்து அதிகரிக்கும்
(3) மூலதனம் அதிகரிக்கும் , சொத்து குறையும்
(4) சொத்து அதிகரிக்கும் ,சொத்து குறையும்

20) X அச்சில் கணக்குகளும் Y அச்சில் அதற்கான உதாரணங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. உரிமை | A. வங்கிக்கடன் வட்டிக்கணக்கு |
| 2. பொறுப்பு | B. அட்டுறு செலவுக்கணக்கு |
| 3. வருமானம் | C. கடன்பட்டோர் கணக்கு |
| 4. செலவு | D. விற்பனை கணக்கு |

X அச்சில் காட்டப்பட்டுள்ள கணக்கு வகைகளுக்கு Y அச்சில் உதாரணங்கள் முறையே பொருந்தும் விடையானது

(1) 1-C, 2-A, 3-B, 4-D (2) 1-C, 2-B, 3-D, 4-A
(3) 1-A, 2-B, 3-C, 4-D (4) 1-A, 2-D, 3-C, 4-B

21) வணிகத்தின் முதன்மை ஏடுகளில் பதியப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

காசுக்கு விற்பனை ரூ 15000
கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு ரூ 14000

மேலே காட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஏடுகளில் பதிவு செய்யும் போது பயன்படுத்தப்படும் மூல அவணங்கள் முறையே.

1. விற்பனை பட்டியல், கொள்வனவு பட்டியல்
2. பற்றுச்சீட்டு , கொள்வனவு பட்டியல்
3. பற்றுச்சீட்டு , கொடுப்பணவு கைச்சாத்து
4. கொடுப்பணவு கைச்சாத்து, பொது நாட்குறிப்பு

- வங்கியொன்றில் நடைமுறை கணக்கு வைத்துள்ள சதுனிக்கு ரூ 15000 வரை வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றுக்கொள்ள முடியும். அவருடைய வங்கி கணக்கு மீதி ரூ 6000 ஆக உள்ள போது நிலையான கட்டளை கொடுப்பனவின் பெயரில் வங்கி செலுத்திய காப்புறுதி கட்டணம் ரூ 10000 ஆகும்.

வினா 22,23க்கு மேலே உள்ள சம்பவத்தை பயன்படுத்தி விடை தருக.

22) சதுனி பெற்றுக்கொண்டுள்ள வங்கி மேலதிக பற்று வசதியின் பெறுமதி.

(1) ரூ15000 (2) ரூ10000 (3) ரூ6000 (4) ரூ4000

23) நிலையான கட்டளை கொடுப்பனவிற்கு அமைய வங்கி செலுத்திய காப்புறுதி கட்டணத்துக்கான சரியான இரட்டை பதிவு.

1. வங்கி கணக்கு வரவு 10000
   காப்புறுதி கட்டண கணக்கு செலவு 10000

2. காப்புறுதி கட்டணம் கணக்கு வரவு 10000
   வங்கி கணக்கு செலவு 10000

3. காப்புறுதி கட்டணம் கணக்கு வரவு 40000
   காசுக்கணக்கு செலவு 40000

4. காப்புறுதி கட்டணம் கணக்கு வரவு 10000
   வங்கி கணக்கு செலவு 10000

24) காசுக்கணக்கில் வரவு பக்கத்திலுள்ள கழிவு நிரலின் கூட்டுத்தொகை கொடுத்த கழிவு கணக்கில் பதிவதற்கான இரட்டை பதிவு விதி

(1) வருமானம் - அதிகரித்தல் - வரவு (2) செலவு - அதிகரித்தல் - வரவு

(2) வருமானம் - அதிகரித்தல் - செலவு (4) செலவு - அதிகரித்தல் - செலவு

25) வணிகத்தில் காணப்பட்ட சில்லறை காசேட்டு வசக்கட்டு 2500 ஆகும். 2018.03.31இல் சில்லறை காசாளரிடம் காணப்பட்ட மீதி ரூ 500ஆகும். அத்துடன் அன்றைய தினம் மீள் நிரப்பப்பட்ட தொகை ரூ 3000 மார்ச் மாதம் முதல் சில்லறை காசு வசக்கட்டு எவ்வளவு தொகையினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(1) ரூ500 (2) ரூ1000 (3) ரூ2000 (4) ரூ2500

26) விற்பனை நாளேடு

(1) மூல ஆவணமாகும் (2) பேரேட்டு கணக்காகும்

(3) முதன்மை ஏடாகும் (4) விற்பனை கணக்காகும்

27)கீழே சில நடவடிக்கைகள் உமக்கு தரப்பட்டுள்ளது.

A. ரூ 10.000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு விற்கப்பட்டது.
B. ரூ 20.000 பெறுமதியான இயந்திரம் வணிக பாவனைக்காக சேபாவிடம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
C. ரூ 6000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
D. உரிமையாளர் ரூ 5000 பெறுமதியான பொருட்களை சொந்த தேவைக்கு எடுத்தல்

மேலே உள்ள கொடுக்கள் வாங்கல்களில் பொது நாட்குறிப்பில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்களாக அமைவது

(1) A,D (2) A,C,D (3) B,C (4) B,D

கீழே உள்ள தரவுகளுக்கு அமைய வினா இலக்கம் 28,29க்கு விடை தருக.

- கடன் கொடுத்தோரிடம் பெற்ற கழிவு ரூ 1500. இது பெற்ற கழிவுக்கணக்கு, கடன் கொடுத்தோர் கணக்கு ஆகியவற்றில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

28) மேலே உள்ள கொடுக்கள் வாங்கல்கள் தொடர்பாக சரியான கூற்றாக அமைவது

1. வணிகத்தில் மீதியில் எந்த வித கணித ரீதியானதாக்கத்தையும் ஏற்படுத்தாது.
2. தொங்கல் கணக்கில் ரூ 3000 செலவில் காணப்படும்.
3. தொங்கல் கணக்கில் ரூ 1500 வரவில் காணப்படும்.
4. பெற்ற கழிவு கணக்கில் சரியாக பதியப்பட்டுள்ளது.

29) மேலே உள்ள தவறை திருத்துவதற்கான சரியான இரட்டைப்பதிவு

1. கடன்பட்டோர் கணக்கு வரவு 1500 , பெற்ற கழிவு கணக்கு செலவு 1500
2. தொங்கல் கணக்கு வரவு 1500 , பெற்ற கழிவு கணக்கு செலவு 1500
3. தொங்கல் கணக்கு வரவு 3000, பெற்ற கழிவு கணக்கு செலவு 3000
4. கடன்கொடுத்தோர் கணக்கு வரவு 1500 , பெற்ற கழிவு கணக்கு செலவு 1500

- கீழே உள்ள தரவுகளுக்கு அமைய வினா 30,31க்கு விடை தருக.

சதிலியினால் மலர் சாடிகள் உற்பத்தி தொடர்பான வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஜனவரி மாதத்திற்கான நடவடிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

- நேர்பொருள் ரூ80000
- நேர் கூலி ரூ20000
- நேரில் ஏனைய செலவுகள் ரூ30000

ஜனவரி மாதத்தில் 2000 மலர் சாடிகள் உற்பத்தி செய்யப்பட்டது. உற்பத்தி செய்யப்படும் ஒரு மலர் சாடிக்காக ரூ 35 வேலை செய்பவர்களுக்காக வழங்கப்படுகின்றது.

30) மூல கிரயமாக அமைவது
(1) ரூ100000 (2) ரூ130000 (3) ரூ170000 (4) ரூ200000

31) மலர் சாடி ஒன்றிற்கான உற்பத்தி கிரயமாக அமைவது.
(1) ரூ50 (2) ரூ65 (3) ரூ85 (4) ரூ100

32) சுப்பர் ஹீரோ விளையாட்டு கழத்தில் குறித்த ஆண்டில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

A. விளையாட்டு உபகரணம் கொள்வனவு ரூ 50000
B. பெற்ற காசு நன்கொடை ரூ 100000
C. பழைய பத்திரிகை விற்பனை ரூ 50000

D. பெற்ற அங்கத்துவப்பணம் ரூ 10000

மேலே உள்ள உறுப்படிகளில் வருமான கூற்று தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை உள்ளடக்கியது.

(1) A,B,C,D (2) B,C மட்டும் (3) B,Dமட்டும் (4) B,C மற்றும் D மட்டும்

33) சுப்பர் ஹீரோ விளையாட்டு கழகத்தின் அங்கத்தவர் என்னிக்கை 150 ஆகும். வருடாந்த அங்கத்துவப்பணம் ரூ100 ஆகும். 15 அங்கத்தவர்கள் தவிர மற்ற அனைவரும் அங்கத்துவப்பணம் செலுத்தியுள்ளனர். குறித்த ஆண்டுக்காக பெற்ற அங்கத்துவப்பணம்.

(1) ரூ15000 (2) ரூ13500 (3) ரூ1500 (4) ரூ1350

34) பிரசங்க வணிகத்தின் 2017.01.01இல் மோட்டார் வாகன கிரயம் ரூ100000. 2017.01.01இல் திரண்ட பெறுமான தேய்வு ரூ20000 ஆகும். குறித்த மோட்டார் வாகனத்திற்கான ஆண்டு பெறுமான தேய்வு வீதம் 10% . 2017.12.31இல் நிதி நிறுவனத்தில் காட்டப்பட வேண்டிய மோட்டார் வாகன கிரயம் மற்றும் பெறுமதி.

(1) ரூ100000 - ரூ80000 (2) ரூ100000 – ரூ90000
(3) ரூ100000 – ரூ70000 (4) ரூ70000 – ரூ100000

35) ‘‘ஜயவர்தன ஸ்டோர்ஸ்’’ இன் 2017 ஆண்டு மொத்த விற்பனை 100000. அதில் 60% கடனுக்கு விற்பனை செய்யப்பட்டதாகும். கடனுக்கு விற்பனை செய்யப்பட்டவற்றில் 50% காசு பெறப்பட்டிருந்தது. மிகுதி கடன் பட்டோரில் அறவிடமுடியாக் கடனாக பதிவு செய்யப்பட்டது. கடன் பட்டோரில் மீதி மற்றும் 2017.12.31இல் வருமான கூற்றில் காட்டப்பட வேண்டிய அறவிடமுடியாக் கடன்.

(1) ரூ30000 - ரூ3000 (2) ரூ6000 - ரூ6000 (3) ரூ27000 - ரூ3000 (4) ரூ54000 - ரூ6000

கீழே தரப்பட்டுள்ள தகவல்களை கொண்டு 36 - 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.

விகங்க ரன்சர வணிகத்தின் பயிலுனரான கணக்காளரினால் 2017.12.31இல் முடிவுற்ற ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட வியாபார இலாப நட்ட கணக்கு கீழே கட்டப்பட்டுள்ளது.

வியாபார இலாப நட்ட கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | 10000 | விற்பனை | | 63000 |
| கொள்வனவு | 35000 | | | | |
| இறுதி இருப்பு | (3000) | 32000 | | | |
| விற்பனை கிரயம் | | 42000 | | | |
| மொத்த இலாபம் | | 21000 | | | |
| | | **63000** | | | **63000** |
| **விநியோக செலவு** | | | மொத்த இலாபம் கீ.வ | | 21000 |
| அறவிட முடியா கடன் | 500 | | பெற்ற கழிவு | 2000 | |
| சம்பளம் | 1500 | | முதலீட்டு வருமானம் | 3000 | 5000 |
| மோட்டார் வாகன தேய்வு | 10000 | | | | |
| ஏற்றல் கூலி | 500 | | | | |
| உட்சுமைக் கூலி | 800 | 13300 | | | |
| **நிர்வாக செலவு** | | | | | |
| திருத்தச் செலவு | 800 | | | | |
| காப்புறுதி | 500 | 1300 | | | |
| **நிதி ஏனைய செலவு** | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வங்கி கடன் வட்டி | 500 | 500 | | | |
| தேறிய இலாபம் | | 10900 | | | |
| | | **26000** | | | **26000** |

36. விகங்க ரன்சர வணிகத்தின் 31.12.2017 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விற்பனைக்கிரயம் யாது.
1. ரூ 42000 2. ரூ 43300 3. ரூ 42800 4. ரூ 42500

37. விநியோக மற்றும் நிர்வாக செலவுகளின் சரியான மீதிகளை முறையே காட்டும் விடை
1. ரூ 2800-ரூ10500
2. ரூ 3300-ரூ10500
3. ரூ 10500-ரூ2800
4. ரூ 10500-ரூ3300

38. குறித்த வணிகத்தின் மொத்த இலாபம் மற்றும் ஏனைய வருமானம் ஆகியவற்றை சரியாக காட்டும் விடை
1. ரூ 21000-ரூ5000
2. ரூ 20500-ரூ5000
3. ரூ 19700-ரூ5000
4. ரூ 20200-ரூ5000

39. குறித்த வணிகத்தின் ஆண்டுக்காக செலுத்தப்பட்ட வங்கி கடன் வட்டி ரூ 300 , பெற்ற முதலீட்டு வருமானம் ரூ 1800 ஆக இருப்பின் அட்டுறு செலவு மற்றும் அட்டுறு வருமானம் ஆகியவற்றை முறையே காட்டும் விடை.
1. ரூ 500-ரூ3000
2. ரூ 300-ரூ1200
3. ரூ 200-ரூ3000
4. ரூ 200-ரூ1200

40. கிரயம் ரூ 100000 கொண்ட மோட்டார் வாகனத்தின் 2017.01.01 திரண்ட பெறுமானத் தேய்வு ரூ10000 ஆகும். 2017.12.31 இல் நிதி நிலமைக்கூற்றில் காட்டப்பட வேண்டிய தேறிய பெறுமதி.
1. ரூ 20000 2. ரூ 80000 3. ரூ 90000 4. ரூ 100000

- முழுப் பதிப்புரிமையுடையது.

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை 2018 டிசம்பர்**

**மாணவர்களுக்கான கருத்தரங்கு தொடர்**

**மாதிரி வினாப்பத்திரம்**

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் -I ,II**

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் -II**

**கவனிக்குக: வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய விடை அளிக்குக. அதற்கு மேலதிகமாக விடை எழுதப்படும் சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரியினால் மேலதிக விடை வெட்டிவிடப் படாதபோது புள்ளிகள் வழங்கப்படாது வெட்டிவிடப்படும்.**

- முதலாம் வினா உட்பட பகுதிI இல் இருந்து இரண்டு வினாக்களையும் ,பகுதிII இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம்** விடை தருக.
- விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**(01)**
கீழ்வரும் சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு இலக்கம் (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை தருக.

உணவுதரப் பரிசோதகராக சிறிதுகாலம் சேவையாற்றிய ''அமரசேன'' வேலையில் இருந்து விலகி அவரிடம் இருந்த ரூ150000 பெறுமதியான பணத்தை முதலிட்டு 2018.01.01இல் வியாபாரத்தை ஆரம்பித்தார்.**''பூட் சீக்ரட்''**எனப் பெயரிடப்பட்ட குறித்த வியாபாரத்தில் மிளகாய்த்தூள் ,மஞ்சள் தூள் போன்ற வாசனைத் திரவியங்களை பொதிசெய்து விற்பனை செய்தார். ''பூட் சீக்ரட்''வணிகத்திற்கு அவசியமான பொருட்கள் **''கோல்டன் ஸ்பைசிஸ்''** உற்பத்தி நிறுவனத்திடம் இருந்து மொத்தமாக கொள்வனவு செய்யப்பட்ட அதேவேளை கொரகா பேஸ்ட் அமரசேனவின் மகளான திலினியிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

2018 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மரத்தளபாடங்கள் கொள்வனவு | ரூ 20000 |
| காசுக்கு கொள்வனவு (கொரகா பேஸ்ற்) | ரூ 40000 |
| கடனுக்கு கொள்வனவு | ரூ 20000 |
| மின்சார கட்டணம் | ரூ 3000 |
| நிலைய வாடகை | ரூ 15000 |
| ஏனைய செலவுகள் | ரூ 2800 |
| காசுக்குவிற்பனை | ரூ 120000 |

- 2018.01.31 இல் இறுதி இருப்பின் பெறுமதி ரூ 10000
- தளபாடங்களுக்கு ஆண்டுக்கு 12% தேய்விடுக.

இலங்கை தொழிநுட்ப அபிவிருத்தி சபையினால் ''உணவு வாசனைத் திரவியங்கள் தொழிநுட்பம்'' தொடர்பான பாடநெறி ஒன்றை கற்கும் அமரசேனவின் மகளான திலினி கல்வி நடவடிக்கைகள் தொடர்பான செயற்திட்டம் ஒன்றிற்காக கொரகா பேஸ்ட் தயாரித்து 100g உள்ள கப்களில் அடைத்து பூட் சீக்ரட் வணிகத்திற்கு விற்பனை செய்கின்றார். ஜனவரி மாதத்தில் கொரகா பேஸ்ட் கப் 100 தயாரித்து பூட் சீக்ரட் வணிகத்திற்கு விற்பனை செய்ததுடன் அதற்காக ஏற்பட்ட செலவுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கொரகா காசுக்கு கொள்வனவு | ரூ 2500 |
| மின்சார கட்டணம் | ரூ 1500 |
| உதவியாளர் கூலி | ரூ 3000 |
| பொதிசெய்தல் | ரூ 200 |

திலினியினால் கொரகா அறைப்பதற்கான இயந்திரம் ஒன்றுரூ 37500க்கு கொள்வனவு செய்யப்பட்ட அதேவேளை அதன் பயன்படு ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகவும் எஞ்சிய பெறுமதிரூ 1500ஆகவும் மதிப்பிடப்பட்டது.
பூட் சீக்ரட் வணிகத்தின் எதிர்வரும் மாத விற்பனையை 10% ஆல் அதிகரிக்கும் நோக்குடன் குறித்த உற்பத்தியை அண்மையில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு கொண்டுசென்று விற்பனை செய்வதற்கு 2018.01.31இல் அமரசேனவிடமிருந்தரூ ரூ500000 பெறுமதியான வேன் ஒன்றை வணிகத்தில் ஈடுபடுத்தினார் அதற்காக ஒரு தொழிலாளரையும் சேர்த்துகொள்வதற்கு அவர் தீர்மானித்தார்.

i. a. குறித்த சம்பவத்தில் காணப்படும் சேவை வழங்கல் வியாபாரம் ஒன்றை எழுதுக.

b. அரசதுறை வியாபார அமைப்பு ஒன்று எழுதுக.

ii. பூட் சீக்ரட் வணிகஅமைப்பு உள்ளடங்கும் வணிகஅமைப்பு வகையை குறிப்பிட்டு அதன் அனுகூலம் ,பிரதிகூலங்கள் 2 எழுதுக.

iii. a. பூட் சீக்ரட் வணிக அமைப்பில் அக்கறை செலுத்தும் 2 பிரிவினர்களை உதாரணத்துடன் தருக.

b.விற்பனையை 10% ஆல் அதிகரிக்க முடிவு செய்தல் எவ் முகாமைத்துவ கருமத்தில் உள்ளடங்கும்.

iv. இங்குகுறிப்பிடப்படும் ''ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு உற்பத்திகளை கொண்டு சென்று விற்பனை செய்தல் சில்லறை வியாபாரமாகும்'' இக்கூற்றுடன் நீர் உடன் படுகின்றீரா? உமது விடைக்கு காரணம் தருக.

v. a. 2018.01.01 திகதியில் குறித்தவணிகத்தின் கணக்கீட்டு சமன்பாட்டை தொகைகளுடன் தருக.

b.பூட் சீக்ரட் வணிகத்தின் ஜனவரி மாத்திற்கான கொள்வனவுகளின் பெறுமதி எவ்வளவு.

vi. அமரசேனவினால் வேன் வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டமை தொடர்பான நாற்குறிப்பு பதிவை தொகைகளுடன் தருக.

vii. a) 2018.01.31 திகதி ''பூட் சிக்ரட்'' வணிகத்தின் நடைமுறை அல்லா சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு?

b) ''பூட் சீக்ரட்'' வணிகத்தில் பயன்படுத்தக்கூடிய மூல ஆவணங்கள் மற்றும் மூல ஏடுகள் 2 வீதம் தருக.

viii. 2018.01.31இல் உள்ள காசு மீதியை கணிப்பிடுக.

ix. 2018.01.31இல் முடிவடைந்த மாதத்திற்கான ''புட் சிக்ரட்'' வணிகத்தின் வியாபார கணக்கின் மூலம் விற்பனை கிரயம் மற்றும் மொத்த இலாபம் என்பவற்றை கனிப்பிடுக.

x. a) ''**கொரகா பேஸ்ட் கப்**'' ஒன்றின் கிரயத்தினை கணிப்பிடுக.

b) திலினி 20% இலாபத்தினை சேர்த்து விற்பனை செய்வோராயின் அவருக்கு கிடைக்கும் இலாபம் எவ்வளவு?

( புள்ளிகள் 2x10=20 )

பகுதி I

வணிகக் கல்வி

( இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக).

**(02)**

(i). a) தேவை மற்றும் விருப்பம் ஆகியவற்றை பற்றி விளக்குக?

b) இலாப நோக்குடைய வணிகங்களில் பொதுவான நோக்கங்கள் 2 தருக? (2 புள்ளிகள்)

(ii). பின்வரும் கூற்றுகள் உண்மையானதா அல்லது பொய்யானதா எனக் கூறுக.

a) மனிதன் உயிர் வாழ்வதற்கு ஒரு விருப்பத்தினையாவது பூர்த்தி செய்தல் கட்டாயமானதாகும்.

b) வணிகம் தொடர்பாக ஒருவரினால் வழங்கப்படும் உடல் உள ரீதியான பங்களிப்பு முயற்சியாண்மை என கூறப்படும்.

c) வணிகத்தின் புறச்சூழல் தொடர்பாக அறிந்து கொள்வதன் மூலம் சந்தர்ப்பங்களையும் சவால்களையும் தெரிந்து கொள்ள முடியும்.

d) தனியுடைமை வணிகத்தில் பெயரை பதிவு செய்வதன் மூலம் வணிகத்திற்கு அடையாளம் ஒன்று கிடைக்கும். (2 புள்ளிகள்)

(iii).பாடசாலைகளில் கிடைக்கப்பெறும் கட்டளைகளுக்கு அமைய புதிய தையல் இயந்திரங்களை கொண்டு பாடசாலை மாணவருக்கான டை(Tie) மற்றும் பெச் (Batch) உற்பத்தி செய்தல் தொடர்பான வணிகமொன்றை சஹன் நடாத்தி வருகின்றார்.

a) சஹனின் வணிகத்தின் மூலம் வழங்கப்படும் அடிப்படை மனித தேவை யாது

b) இந்த வணிகத்தில் காணப்படும் உற்பத்தி காரணிகள் 2 உதாரணங்களுடன் தருக

(2 புள்ளிகள்)

(iv). ஆரம்பக்கல்வி டிப்ளோமாதாரியான மிஷேல் 2 தொழிலாளர்களை சேவையில் சேர்த்துக்கொண்டு அரச அடுக்கு மாடித்தொடர்களுக்கு அருகில் ஆரம்ப பாடசாலை மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையம் ஒன்றை நடாத்திவருகின்றார்.

a) சம்பவத்தில் குறிப்பிடப்படும் அகச்சூழல் காரணிகள் 2 குறிப்பிடுக.

b) மிஷேலின் வணிகத்தின் இணங்கானக்கூடிய பலம் மற்றும் வாய்ப்பு ஒன்று தருக.

(2 புள்ளிகள்)

(முழுப் புள்ளிகள் 8)

**(03)**

(i) a) சேமிப்பு கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்கு அவசியமான ஆவணங்கள் 2 தருக.

b) காசோலையுடன் தொடர்புடைய பகுதியினர் 2 தருக. (2 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் உண்மையானதா அல்லது பொய்யானதா எனக் கூறுக.

a) ஆயள் காப்புறுதி பத்திரத்தை சான்றுதல் செய்ய முடியாது.

b) போக்குவரத்து சமிக்ஞைகள் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட முறைகளானது. இலத்திரனியல் தொடர்பாடல் முறைக்காக பயன்படுத்தப்படுகின்றது.

c) அதிக எடை கொண்ட பொருட்களை கொண்டு செல்வதற்கு நீர் வழிப்போக்குவருத்து சிறந்ததாகும்.

d) ஒப்பீட்டளவில் விலை குறைவாக காணப்படுதல் மொத்த வியாபாரத்தின் சிறப்பம்சமாகும்.

(2 புள்ளிகள்)

(iii)

a) சர்வதேச அளவில் பயன்படுத்தப்படும் கடன் அட்டை 2 தருக.
b) யசசி வீரசிங்க ரூ 50000 பெறுமதியான பொருட்களை ககனி தர்மசேனவிடம் கொள்வனவு செய்து அவருக்கு 2018.08.10 திகதி காசோலை ஒன்றை வழங்கினார். குறித்த விடயம் தொடர்பாக காசோலை அடியிதழில் குறிப்பிடப்படும் முறையே எழுதுக. (2 புள்ளிகள்)

(iv)

a) இலங்கையினால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.
இரத்தினக்கல், கோதுமை மா ,தேங்காய் , மோட்டார் வாகனம் , சீமெந்து , காரீயம்
மேலே உள்ள பொருட் தொகுதியை ஏற்றுமதி , இறக்குமதி செய்யப்படும் பொருட்களை வேறுபடுத்துக.

b) தரம் 6 இல் கல்வி கற்கும் கசுன் பாடசாலையில் விளையாடிக் கொண்டிருந்த போது கீழே விபத்துக்கு உள்ளானார். அவருடைய வகுப்பாசிரியர் கசுனின் தாயாருக்கு தொலைபேசி மூலம் இதனை தெரியப்படுத்தினார். மேலே சம்பவத்தை அடிப்படையாக தெடர்பாடல் செயன்முறையின் கூறுகளை உதாரணத்துடன் தருக.

அனுப்புபவர் :
செய்தி :
ஊடகம் :
பெறுபவர் :

(2 புள்ளிகள்)
(முழுப் புள்ளிகள் 8)

**(04)** (i) a) திறை சேரி உண்டியல்கள் என்பதனை சுறுக்கமாக விளக்குக.

b) முதலீட்டு வழிமுறை ஒன்றை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் உண்மையானதா அல்லது பொய்யானதா எனக் கூறுக.

a) சாதாரன பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் கூட்டினைக்கப்பட்ட கம்பனி ஒன்றில் உரிமையாளராக மாற முடியும்.
b) கொள்வனவு செய்யப்பட்ட பங்கு சான்றிதழ்களை கடன் பெறும்போது பொறுப்புக்காக வைக்க முடியாது.
c) உரிமையாளர் தனது வியாபார நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்தார். இது முகாமைத்துவத்தின் திட்டமிடல் கருமமாகும்.
d) நிறுவனமொன்று தமது குறைந்தளவான வளங்களை கொண்டு அதிகூடிய பலனை பெற்றுக்கொள்ளல் வினைத்திறனாகும். (2 புள்ளிகள்)

(iii) பாடசாலை வணிக தின நிகழ்வுகள் சில கீழே காட்டப்பட்டுள்ளது.

a) வணிக தின நிகழ்விற்கு நடைபெற வேண்டிய விதம் மற்றும் தேவையான பணம் பெற்றுக்கொள்ளும் வழிகள் தொடர்பாக தீர்மானித்தல்.
b) ஒவ்வொரு குழு உறுப்பினர்களுக்கும் தேவையான தகவல்களையும்,அறிவுறுத்தல்களையும் வழங்கல்.
c) நிகழ்வு திட்டமிட்டப்படி நடைபெறுகின்றதா என தேடிப்பார்த்தலும் அவ்வாறு அல்லாத விடத்து அதற்கு தீர்வுகளை தேடி அறிதல்.
d) நிகழ்வினை வெற்றிகரமாக நடாத்துவதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் தலைவர்களை நியமித்தல்.

மேலே கூறப்பட்ட நிகழ்வுகளுக்கு பொருத்தமான முகாமைத்துவ கருமங்களை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iv) பிஸ்கட் உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று உயர்வான தரமுடைய புதிய வகையிலான பிஸ்கட் வகையினை உற்பத்தி செய்து அழகான வடிவமைப்புடன் விலை ரூ 78 க்கு நகரத்திலுள்ள ஹோட்டல் மற்றும் வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்வதற்கு தீர்மானித்தார். உற்பத்தி தொடர்பாக வாடிக்கையாளர்கள் அறிந்து கொள்வதற்காக விளம்பரங்கள் நகர் முழுவதும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

சந்தைப்படுத்தல் கலவைகளின் காரணிகளை குறிப்பிட்டு மேலே உள்ள சம்பவத்தின் அடிப்படையில் உதாரணங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

( முழுப் புள்ளிகள் 8)

## பகுதி II
(கணக்கீடு)
( இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக).

**(05).** (i) அ. யசுசி பகசிரா நிறுவனத்தின் பின்வரும் நடவடிக்கைகளை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எனும்

அடிப்படையில் வகைப்படுத்துக

a. வங்கிக் கடன்
b. மோட்டார் கார்
c. கடன் கொடுத்தோர்
d. கடன் பட்டோர்
e. கட்டிடம்
f. வங்கி மேலதிகப் பற்று
g. நிலையான வைப்பு
h. அட்டுறு செலவுகள்

ஆ. சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வேறுபடுத்துவதற்குப் பல காரணிகள் உள்ளன

சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் பொருந்தும் பொதுவான பண்புகள் யாவை

( 2 புள்ளிகள்)

(ii) ஒரு வணிகத்தின் நடைபெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் கீழே காட்டப்பட்டுள்ளது.

| திகதி | சொத்து | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| ஜன 01 | அதிகரித்தல் | | அதிகரித்தல் | | |
| ஜன 05 | அதிகரித்தல்<br>குறைவடைதல் | | | | |
| ஜன 10 | அதிகரித்தல் | | | | அதிகரித்தல் |
| ஜன 15 | குறைவடைதல் | | குறைவடைதல் | | குறைவடைதல் |

மேலே கணக்கீட்டு சமன்பாட்டில் காட்டப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் தொகைகளுடன் எழுதிக்காட்டுக. (02 புள்ளிகள்)

(iii) ககனி புன்சராவின் வணிகத்தில் 2018 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு அமைய காசு புத்தகம் கீழே காட்டப்பட்டுள்ளது.

காசுப் புததகம்

| திகதி | பற். இல | விபரம் | பே /ப | கழிவு | காசு | திகதி | புற். இல | விபரம் | பே /ப | கழி வு | காசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1/1 | | மீ/கீ/வ | | | 30000 | 1/10 | | கொள்வனவு | | | 8000 |
| 1/8 | | விற்பனை | | | 12000 | 1/12 | | ஹசருன் (க.கொடுத்தோர் ) | | 500 | 4500 |
| 1/15 | | வியாகு (க.பட்டோர்) | | 1000 | 10000 | 1/16 | | மின்கட்டணம் | | | 500 |
| 1/18 | | வங்கி கடன் | | | 15000 | 1/20 | | பற்றுக்கள் | | | 10000 |
| | | | | | | 1/25 | | மோட்டார் வாகனம் | | | 30000 |
| | | | | | | 1/31 | | மீதீ /கீ /செ | | | 14000 |
| | | | | | | | | | | | |
| | | | | 1000 | 67000 | | | | | 500 | 67000 |

மேலே காசுப்புத்தகத்தில் காட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக்கு மாற்றுவதற்கு அவசியமான நான்கு இரட்டைப் பதிவுகளை (கொடுத்த கழிவு மற்றும் பெற்ற கழிவு உட்பட) எழுதுக.
(04 புள்ளிகள்)

(iv) ஹசருளின் வணிகத்தின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

சில்லறை காசு வசக்கட்டு ரூ 2000

2018 ஜனவரி மாதத்தில் சில்லறை செலவுகளின் மொத்தம் ரூ 1850

2018 பெப்ரவரி 01ம் திகதி சில்லறை காசு மீள்நிரப்பப்பட்டது

2018 பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற சில்லறை செலவுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| திகதி | விபரம் | தொகை | பற்றுச்சீட்டு.இல |
|---|---|---|---|
| பெப் 02 | போக்குவரத்துச் செலவு | ரூ 80 | 01 |
| பெப் 03 | கபிலவிற்கு செலுத்திய சம்பள முற்பணம் | ரூ 200 | 02 |
| பெப் 10 | பேனா பென்சில் செலவு | ரூ 100 | 03 |
| பெப் 12 | சீனி தேயிலை செலவு | ரூ 120 | 04 |
| பெப் 15 | பஸ் கட்டணம் | ரூ 100 | 05 |
| பெப் 17 | C.R. கொப்பி 02 | ரூ 160 | 06 |
| பெப் 20 | குளிர்பானம் | ரூ 100 | 07 |

a. போக்குவரத்து , உபசரிப்பு , எழுதுகருவி என்ற பகுப்பாய்வு நிரல்களைப் உள்ளடக்கிய சில்லறை காசேட்டை தயாரித்து வசக்கட்டை மீள்நிரப்புக.
b. பகுப்பாய்வு நிரல்களின் கூட்டுத்தொகையினை பேரேட்டுக்கு மாற்றுக. (04 புள்ளிகள்)
(முழுப் புள்ளிகள் 12)

**06.**

(i). a. வணிகத்தில் காணப்படகூடிய நடைமுறை அல்லாத சொத்துகளுக்கு உதாரணம் 4 தருக.

b. பொது நாட்குறிப்பில் பதியப்பட கூடிய கொடுக்கல் வாங்கல் வகைகள் 2 தருக.

(02 புள்ளிகள்)

(ii). கபில பாடசாலை மாணவர்களுக்கு அவசியமான மேசைகள் உற்பத்தி செய்கின்றார். அவருடைய வணிகத்தில் தச்சர்கள் இருவரும் மற்றும் பாதுகாவலர் ஒருவரும் வேலை செய்கின்றனர்.

2018 ஜனவரி மாதத்தில் மாணவர் மேசைகள் உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பலகை | ரூ 80000 |
| இரும்பு | ரூ 150000 |
| தச்சர் ஒருவரின் கூலி | ரூ 20000 |
| தொழிற்சாலை வாடகை | ரூ 12000 |
| பாதுகாவலர் சம்பளம் | ரூ 15000 |
| இயந்திர தேய்வு | ரூ 20000 |

ஜனவரி மாதத்தில் மாணவர் மேசைகள் 100 உற்பத்தி செய்யப்பட்டு மேசை ஒன்றின் கிரயத்துக்கு 20% இலாபம் சேர்த்து விற்பனை விலை தீர்மானிக்கப்படுகின்றது.

வேண்டப்படுவது
a. மூலக்கிரயம்
b. மொத்த உற்பத்தி கிரயம்
c. மேசை ஒன்றின் அலகு கிரயம்
d. மேசை ஒன்றின் விற்பனை விலை

(02 புள்ளிகள்)

(iii). புன்சராவின் வணிகத்தில் 2018 ஜனவரி மாதத்தில் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கு மீதியும் வங்கி கூற்று மீதியும் பரிசீலித்த போது கீழ்வரும் தரவுகள் கண்டுக்கொள்ளபட்டன.

- வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்ட காசோலைகள் பெறுமதி ரூ 20000
- வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்பிக்கப்பட்ட காசோலைகள் பெறுமதி ரூ 14000
- வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலைகள் பெறுமதி ரூ 15000
- வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்பிக்கப்படாத காசோலைகள் பெறுமதி ரூ 10000
- வங்கி கட்டணம் , காசோலை புத்தக கட்டணம் ரூ3000, ரூ1200
- முதலீட்டு வருமானம் , நேரடி வைப்புக்கள் ரூ 10000 ரூ 30000

வேண்டப்படுவது
a. வங்கி கணக்கு மீதியை விட வங்கி கூற்று மீதி குறைவாக இருப்பதற்கான காரணங்கள் எவை?
b. வங்கி கணக்கு சீராக்கத்தில் கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் எவை?

(iv). பேசராவின் வணிகத்தின் 2017.12.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் செலவு பக்கம் ரூ 500 குறைவாக காணப்பட்டது. எனவே குறித்த வணிகத்தின் கணக்காளரினால் பரிசோதிக்கப்பட்ட போது பின்வரும் தவறுகள் கண்டுகொள்ளப்பட்டது.

- காப்புறுதி கட்டணமாக செலுத்தப்பட்ட ரூ 1000 இரண்டு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ரூ 5500 க்கு கடனுக்கு விற்பனை, விற்பனை கணக்கில் ரூ 5000 என பதிவு செய்யப்பட்டிருந்தது.
- ரூ 5000 பெறுமதியான கொள்வனவு பட்டியல் ஒன்று கணக்கு புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது
a. மேற்குறித்த வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்ப பதிவு
b. தொங்கல் கணக்கு. ( 4 புள்ளிகள்)

(முழுப் புள்ளிகள் 12)

**07.**

(i).a. இலாப நோக்கற்ற அமைப்புக்களின் பிரதான நோக்கங்கள் 2 தருக.
b. இலாப நோக்கற்ற அமைப்புக்களின் பிரதான வருமான மூலம் எது.? (2 புள்ளிகள்)

(ii). சுபர் ஹீரோ விளையாட்டு கழகத்தின் 2017 ஆண்டுக்கான பெறுவனவு கொடுப்பனவு கணக்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு மீதி | 2000 | விளையாட்டு உபகரண கொள்வனவு | 4000 |
| அங்கத்துவ கட்டணம் | 4000 | காவலாளி சம்பளம் | 1000 |
| நன்கொடை | 1000 | தொலைபேசி கட்டணம் | 500 |
| | | மீ.கீ.செ | 1500 |
| | **7000** | | **7000** |
| மீ.கீ.வ | 1500 | | |

மேலதிக தகவல்

- அங்கத்தவர்களின் எண்ணிக்கை 50. வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ100 ஆகும்.

வேண்டப்படுவது

- சுபர்ஹீரோ விளையாட்டு கழகத்தின் 2017.12.31இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று.

(02 புள்ளிகள்)

(iii). விஹகி ரன்சர வணிகத்தின் 2017.12.31இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனை | | 100000 |
| கொள்வனவு | 30000 | |
| 2017.01.01இல் இருப்பு | 5000 | |
| குாணி | 50000 | |
| கட்டிடம் (கிரயத்தில்) | 100000 | |
| தொழிலாளர் சம்பளம் | 5000 | |
| பெற்ற கழிவு | | 4000 |
| கொடுத்த கழிவு | 1000 | |
| 8% வங்கி கடன் | | 20000 |
| கடன் பட்டோர் | 10000 | |
| கடன் கொடுத்தோர் | | 12000 |
| காப்புறுதி கட்டணம் | 500 | |
| வங்கி கடன் வட்டி | 1000 | |
| 2017.01.01இல் கட்டிட தேய்வு | | 20000 |
| காசு | 3000 | |
| ஏற்றல் கூலி | 1000 | |
| மூலதனம் | | 50500 |
| | **206500** | **206500** |

மேலதிக தகவல்கள்

1. 2017.12.31இல் உள்ளவாறான இருப்பு ரூ3000
2. கட்டிடங்களுக்கு ஆண்டுக்கு 5% தேய்விடப்படுகிறது.
3. கடன் பட்டோரில் 10% அறவிட முடியாக் கடனாக பதிவழிக்கப்பட வேண்டும்.

மேலதிக தகவல்

a. 2017.12.31இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்ட கூற்று
b. 2017.12.31இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று. (08 புள்ளிகள்)

(முழுப் புள்ளிகள் 12)